தரம் 10

2

௨௦௨௧



**கே /தெஹி/ சபுமல் கந்த த.ம.வி**

**ஆசிரியர் ம.கௌரி**

**தமிழ்மொழியும் இலக்கியமும்**

- **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **இவ்வினாக்களை பயிற்சி கொப்பியில் பிரதி செய்யவும்.**

01. “**பிரசண்ட மாருதத்**திற்குப் பிறகு என்று சொல்லுகிற பிறகு” என்பதில் பிரசண்ட மாருதம் என்பது.

01. தென்றல் 02. திகைப்பு 03. கடுங்காற்று 04. எதிர்ப்பு

02. “**கணக்காயர்** இல்லாத ஊரும் ” என்பதில் **கணக்காயர்** என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்

01. கணக்காளர் 02. ஓதுவிப்பார் 03. நீதிபதி 04. மூத்தோர்

03. “சிறு மீன் சினையினும் **நுண்ணியதே** ஆயினும்” என்பதில் **நுண்ணிய** என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்

01. முட்டை 02. தாமரை 03. மிகச் சிறியது 04. பெரியது

04. “**மடைத்தலையில்** ஓடு மீன் ஓட உறுமீன்” என்பதில் **மடைத்தலை** என்ற சொல்லின் ஒத்த கருத்துச் சொல்

01. பொய்கை 02. கடல் 03. வயல் 04. வாய்க்கால்

05. “**நன்மை** நன்மை பயத்தல் இல” என்பதில் **நன்மை** என்பதன் ஒத்த சொல்

01. அனுகூலம் 02. தீமை 03. விளைவு 04. உதவி

06. “களித்தங்கு உறவாடி தம்மில் **கலப்பர்** கற்றாரே” என்பதில் **கலத்தல்** என்பதன் எதிர்ச் சொல்

01. வரைதல் 02. சேர்த்தல் 03. பிரிதல் 04. சேருதல்

07. வில்லுப்பாட்டின் பிரதான கதை மாந்தர் **குருவே** ஆவார். **குரு** என்ற சொல்லினது எதிர்ப்பாற் சொல்லாக அமைவது

01. குருவி 02. குருத்தினி 03. குருத்தி 04. குருளி

08. “**கோதிலா** நதியென குவலயத்தார் வாடி”. இங்கே **கோது** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்

01. கேடு 02. குற்றம் 03. நீர்வற்றாத 04. நன்மை

09. “**யௌவன** சந்நியாசி தவத்தில் மூழ்கியிருந்தார்” என்பதில் **யௌவனம்** என்ற சொல்லினது எதிர்க்கருத்துச் சொல்

01. யோகம் 02. இளமை 03. முதுமை 04. கேவலம்

10. “நீரெடுத்து வருவதற்கு அவள் மணி நித்திலப்...” என்பதில் வரும் **நித்திலம்** என்பது

01. முத்து 02. வைரம் 03. புன்னகை 04. நிலம்

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

11. பின்வருவனவற்றுள் பகுபத உறுப்பு அல்லாதது.

01. பகுதி 02. விகுதி 03. காரிகை 04. சந்தி

12. இன்டர்வியூ (interview) என்பதன் கலைச் சொல் வடிவம்

01.பரிந்துரை 02. நேர்முகம் 03. நேரலை 04. பிரதியீடு

13. “செங்கதிர்ச் செல்வன் வெண்கதிர் பரப்பி குணதிசைக் கடலில் குளித்து எழுந்தான்”- இது அமைப்பு அடிப்படையில்.

01. தனி வாக்கியம் 02. தொடர் வாக்கியம் 03. கூட்டு வாக்கியம் 04. கலப்பு வாக்கியம்

14. ஒரு தலைமைத் தொடரையும் சார்புத் தொடரையும் கொண்டமைந்த வாக்கியம்

01. தனி வாக்கியம் 02. கலப்பு வாக்கியம் 03. கூட்டு வாக்கியம் 04. கூற்று வாக்கியம்

15. “ஆடிக்குடத்தடையும் ...” இதில் இடம்பெற்றுள்ள அணி

01. உவமை அணி 02. உயர்வு நவிற்சி அணி

03. உருவக அணி 04. சிலேடை அணி

16. பின்வருவனவற்றுள் உருவகமாய் அமைவது,

01. மான்விழி 02. கொவ்வையிதழ் 03. முகமதி 04. குமுதவாய்

17. உண்டான் என்ற பகுபதத்தில் உள்ள உறுப்புக்களாவன

01. பாட்டு 02. புலவன் 03. பாரதி 04. எட்டயபுரம்

18. செயப்படுபொருளை உணர்த்தும் வேற்றுமை

01. ஐந்தாம் வேற்றுமை 02. மூன்றாம் வேற்றுமை

03. முதலாம் வேற்றுமை 04. இரண்டாம் வேற்றுமை

19. ஆந்தை அலறும் என்பது போல பன்றி

01. கர்ச்சிக்கும் 02. குறுகுறுக்கும்

03. கனைக்கும் 04. உறுமும்

20. பொன் + நிறம் என்பதைப் புணர்த்தினால்

01. பொன்நிறம் 02. பொன்னிறம்

03. பொண்ணிறம் 04. பொந்நிறம்